கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

**அ.வ.எண். 142/2020**

2024ம் ஆண்டு ஜனவரி திங்கள் 09ம் நாள் வாதி தரப்பு வா.சா.3ன் பிரமாண வாக்குமூலம். 1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.ரவி, பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | | நிசான் |
| த/பெ. | : | குலாப்ஜான் |
| தொழில் | : | கிராம நிர்வாக அலுவலர், பச்சூர் கிராமம் |
| ஊர் | : | நாட்றம்பள்ளி |
| வயது | : | 38 |
| மதம் | : | முஸ்லீம் |
| வட்டம் | : | திருப்பத்தூர் |
| மாவட்டம் | : | திருப்பத்தூர். |

வா.சா.3 –ன் முதல் விசாரணை தொடர்ச்சி:

சர்வே எண்.673/14 கிராம கணக்குகளின்படி வாதி ஆறுமுகம் மகன் இந்திரன் பெயரில் உள்ளது. மேற்படி சர்வே எண்.673/14 கிராம நத்தமாக உள்ளது. நான் அங்கு செல்லும் போது வீடு பூட்டிருந்தது ஆனால் அங்கு காந்தி கணவர் பெயர் ஜெயபால் (1ம் பிரதிவாதி) வசிப்பதாக என்னிடம் சொன்னார்கள். சர்வே எண்.673/14ல் காந்தி அவர் கணவர் ஜெயபால் பெயர் இல்லை. நான் சர்வே எண்.673/14ல் யார் வசிக்கிறார்கள் என்று அங்கு உள்ள மக்களிடம் கேட்டபோது அவர்கள் பயத்தினால் எதுவும் சொல்லவில்லை.

சர்வே எண்.673/14ன் செக்குபந்தி என்னவென்றால் கிழக்கு அரசு புறம்போக்கு நிலத்தில் பஞ்சாயத்திற்கு சொந்தமான தண்ணீர் டேங்க் உள்ளது. மேற்கு ராஜியின் காலிமனையாகும். வடக்கு ஆற்றுக்கால் புறம்போக்கு நிலமாகும். தெற்கு சென்றாயன் சாமி கோவில் புறம்போக்கு நிலமாகும். சர்வே எண்.673/14 ன் அடங்கல், சிட்டா மற்றும் அ பதிவேடு வரைபடத்தின்

நகல்களானது **சா.சா.1** முதல் **சா.சா.4** வரை குறியீடு செய்யப்படுகிறது. ஆவணங்களின் அடிப்படையில் சர்வே எண்.673/14 தருமன் மனைவி ருக்கு பெயரிலும், கண்ணையன் மகன் சுந்தரமூர்த்தி அதன்பின்னர் வாதி இந்திரன் பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

சர்வே எண்.673/14 ஐப் பொறுத்து ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சி சொல்கிறேன் என்றால் சரிதான். சர்வே எண்.673 ஆனது பல உட்பிரிவுகள் செய்யப்பட்டு அரசாங்கத்தால் வீடு இல்லாதவர்களுக்கு இலவசமாக பட்டா கொடுக்கப்பட்டது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண்.673 ல் 25 மனைகளாக பிரிக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் வருவாய் துறை கணக்குப்படி 15 மனைகள் மட்டும் தான் பிரிக்கப்பட்டுள்ளது. மேற்படி 15 மனைகளில் புறம்போக்கு நிலமும் அடங்கும்.

சர்வே எண்.673/14 க்கு பக்கத்தில் சர்வே எண்.673/15 எந்தப் பக்கம் வருகிறது என்றால் சர்வே எண்.673/14 லிருந்து சுமார் 200 அடிகள் தள்ளி சர்வே எண்.673/15 உள்ளது. என்னிடம் காட்டப்படும் சர்வே எண்.673/16 அசல் பட்டாவானது அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்தின் செக்குபந்தியில் சர்வே எண்.673/16 வருகிறதா என்றால் இல்லை. சர்வே எண்.673/16 ல் பிரதிவாதிகள் இருவரும் 40 ஆண்டு காலமாக கூரை வீடு கட்டி மின் இணைப்பு பெற்று வசித்து வருகிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.673/16 ன் பரப்பளவு எவ்வளவு என்றால் 38 சதுர மீட்டர் (409 சதுர அடிகள்) ஆகும்.

சர்வே எண்.673/14 ல் 409 சதுர அடிகள் தனியாக உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.673/14 ல் உள்ள 409 சதுர அடிகளில் குடிசை வீடு சுமார் 350 சதுர அடிகள் இருக்கும், அதில் 4 தென்னை மரங்கள் உள்ளன. சர்வே எண்.673/14 ல் உள்ள குடிசை வீடு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதா

என்றால் இல்லை.  சர்வே எண்.673/14 ல் உள்ள செக்குபந்தியில் உள்ள இடங்கள் காலி நிலமாக தான் உள்ளது. சர்வே எண்.673/15 யார் பெயரில் உள்ளது என்றால் சின்னதுரை மனைவி கனகு பெயரில் உள்ளது. சர்வே எண்.673/15 அடுத்து எவ்வளவு காலி இடம் உள்ளது என்றால் 5.6 ஏர்ஸ் உள்ளது.  அங்கு வேறு யாரும் வீடு கட்டி வாழ்ந்து வருகிறார்களா என்றால் அங்கு வீடும் உள்ளது ஆக்கிரமிப்பும் உள்ளது.

(பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)